**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 2 of 2025 |

Depositions of PW -5 witness for ________ { Prosecution / Defence / Court

Name : ஈஸ்வரன்

Father's Name : ராமசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th **day of April** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் செஞ்சேரி புதூரில் குடியிருந்து கொண்டு விவசாயம் பார்த்து வருகிறேன். விபத்து சம்பவத்தில் இறந்த செல்லமுத்து மற்றும் அவரது மனைவி ராமாத்தாள் இருவரும் எங்கள் தோட்டத்தின் அருகில் உள்ள தோட்டத்தின் உரிமையாளர்கள். தேதி மாதம் மற்றும் வருடம் ஞாபகம் இல்லை சுமார் பத்து வருடத்திற்கு முன்பாக செல்லமுத்து மற்றும் அவரது மனைவி ராமாத்தாள் இருவரும் இருசக்கர வாகனத்தில் பல்லடத்தில் இருந்து உடுமலைப்பேட்டை ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று ரோட்டை கடந்த பொழுது அவ்வழியாக வந்த டூரிஸ்ட் பேருந்து மோதி விபத்து ஏற்படுத்தி இருப்பதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் விபத்து ஏற்பட்டு சுமார் ஐந்து நிமிடம் கழித்து சம்பவ இடம் சென்று பார்த்த பொழுது இருவரும் அடிப்பட்டு இறந்த நிலையில் இருந்தார்கள். பின்னர் அவர்கள் இருவரையும் ஆம்புலன்ஸ் மூலமாக பொள்ளாச்சி அரசு

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இது சம்பந்தமாக பொன்னுசாமி அவர்கள் கொடுத்த புகார் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 04.11.2016 ஆம் தேதி காலை நானும் பொன்னுசாமி என்பவரும் வடுகபாளையம் பிரிவில் நின்று கொண்டிருந்த பொழுது, அவ்வழியாக செல்லமுத்து மற்றும் அவரது மனைவி ராமாத்தாள் இருவரும் இருசக்கர வாகனத்தில பல்லடத்தில் இருந்து உடுமலைப்பேட்டை ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து சைகை காட்டி, வடுகபாளையம் ரோட்டில் செல்ல மேற்கு நோக்கி திரும்பிய பொழுது அதே ரோட்டில் அவர்களுக்கு பின்னால் அதே சாலையில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்த டிராவல்ஸ் பஸ் எதிரி ஓட்டி வந்து இருவர் மீதும் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றும், மேற்படி விபத்தானது எதிரியின் அஜாக்கிரதையால் ஏற்பட்டதாக போலீசார் விசாரணையின் பொழுது கூறிவிட்டு தற்பொழுது சம்பவ விபத்தானது நடைபெற்று தகவல் தெரிந்து ஐந்து நிமிடம் கழித்து சம்பவ இடம் சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**